தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.25/மா/2022**

**நாள். 09.05.2022**

திரு. M. விஜயன், திரு. B. விஜயகுமார்
தண்டையார்பேட்டை, சென்னை – 81. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம் –05, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4–வது தெரு, கதவு எண்.3/13–ல் வசிக்கும் திரு. M. விஜயன் மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், கதவு எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B. விஜய்குமார் ஆகியோரின் 18.02.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.02.2022 அன்று பெறப்பட்டு 25/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரர்களது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4–வது தெரு, கதவு எண்.3/13–ல் வசிக்கும் திரு. M.விஜயன் மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், கதவு எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் B.விஜயகுமார் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 18.02..2022 நாளிட்ட தங்களது மனுவில், கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளனர்:

" சென்னை மாவட்டத்தின் முக்கியமான பகுதியாக பாரிமுனை, பூக்கடை பகுதி அமைந்துள்ளது. நாள்தோறும் லட்சக்கணக்கான மக்கள் வந்து செல்லும் இடமாகும். இங்கு சென்னை உயர்நீதிமன்றம் முதல் யானைகவுனி பகுதி வரை NSC Bose சாலை அமைந்துள்ளது. இந்த சாலையினை சுற்றிலும் வியாபார சாலைகள், பெரிய பேருந்து நிறுத்தம், சென்னை உயர்நீதிமன்றம் போன்ற முக்கிய பகுதிகள் அமைந்துள்ளதால் எப்பொழுதும் இந்த சாலை பரபரப்பாகவும், மக்கள் நெருக்கமாகவும், இட நெருக்கடியாகவும் இருக்கிறது. மேற்கண்ட NSC Bose சாலையை பாதசாரிகள் சிரமமின்றி பயன்படுத்த வேண்டி இங்கே சாலையோர கடைகள் வைக்க அரசின் அனுமதியில்லை, எனினும் சிலர் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளின் மறைமுக ஆதரவுடன் சாலையின் நடைபாதைகளை ஆக்கிரமிப்பு செய்து

கடைகள் நடத்திக்கொண்டு வருவதும் அவ்வப்போது புகார் அளிக்கும் போதும், நீதிமன்றம் உத்தரவிடும்போதும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களால் தற்காலிகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதும் சில நாட்கள் கழித்து அதே இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கடைகள் நடத்திக்கொண்டு வருவதும் மறுபடியும் புகார் அளிப்பதும், நீதிமன்றம் செல்வதும் பல வருடங்களாக இதே தொடர்கதையாக தொடர்கிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வை தற்போது வரை மாநகராட்சியால் ஏற்படுத்தப்படவில்லை. கடந்த 2015ம் வருடம் மேற்கண்ட சாலையில் எந்த ஆக்கிரமிப்புகளும் இருக்கக்கூடாது என்றும் ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டுமென்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண். WP.No. 32622 of 2015, and MP. No.1 of 2015, என்ற வழக்கிலும் அதன் பிறகு வந்த பல்வேறு வழக்குகளிலும் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த தீர்ப்பின் வாசகம் அடங்கிய பதாகைகள் மேற்கண்ட சாலையின் இந்த தெருவின் பல்வேறு இடங்களில் நடப்பட்டாலும், அதன் கீழும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்பு ஒரு சதவீதம் கூட பின்பற்றப்படவில்லை.

தற்போது இந்த 2022 வருட தொடக்கத்திலும் மேற்கண்ட NSC Bose சாலையில் பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு இடைஞ்சலாக சுமார் நூற்றுக்கும் மேற்கண்ட சாலையோர கடைகள் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனால் இந்த சாலையின் நடைபாதையை பயன்படுத்த சிரமப்படும் மக்கள் அருகில் வாகனங்கள் செல்லும் சாலையை ஆபத்து உணராமல் பயன்படுத்தி வருகின்றனர். சாலையோர ஆக்கிரமிப்புகளை சென்னை மாநகராட்சி சட்டம்–1919 சட்டப்பிரிவு 222–ன்படி சட்டப்படியான கடமை மற்றும் அதிகாரங்கள் இருந்தும் அதை அதிகாரிகள் முறையாக செயல்படுத்துவதில்லை, மேற்கண்ட பிரச்சனை தொடர்பாக கடந்த மாதம் நாள்.05.01.2022 அன்று சென்னை மாநகராட்சிக்கு எழுத்துப்பூர்வமான புகார் மனு அனுப்பியும் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் சட்டப்படி ஒரு மனு அல்லது கோரிக்கைக்கு முப்பது நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும் என்ற அரசாணையைக்கூட மாநகராட்சிஅலுவலர்கள் பின்பற்றுவது இல்லை.

எனவே இந்த மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட பொதுநலன் சார்ந்த கோரிக்கை மனுவினை தீர விசாரணை செய்து மேற்கண்ட சாலையில் உள்ள தற்காலிக மற்றும் நிரந்தர ஆக்கிரமிப்புகளை அகற்றவும் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 01.03.2022 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்–05, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது. மண்டல அலுவலர், மண்டலம்–05, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3) மனுதாரர்கள் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–05, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோருக்கு 28.04.2022 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 19.04.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர்கள் திருவாளர்கள் M. விஜயன் மற்றும் B. விஜயகுமார் ஆகியோர் 28.04.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

> "சென்னை பாரிமுனை பகுதியில், என்.எஸ்.சி.போஸ் ரோடு அமைந்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றம், பெரிய பேருந்து நிறுத்தம் போன்றவை அமைந்துள்ளதால் இப்பகுதி எப்போதும் பரபரப்பாகவும், மக்கள்

நெருக்கத்துடனும் காணப்படுகிறது. நடைபாதையில் சாலையோரக்கடைகள் பெருகி, மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். மாநகராட்சியைச் சேர்ந்த பணியாளர்களின் உதவியுடன் மேற்கண்ட கடைகள் இயங்கி வருகின்றன. மாநகராட்சியால் புகார்கள் பெறப்படும்போது அகற்றப்படும் மேற்கண்ட கடைகள் சிறிது காலத்திலேயே மீண்டும் அக்கடைகள் அங்கு வந்து விடுகின்றன. எனவே மக்கள் சிரமத்திற்குள்ளாக்கும் மேற்கண்ட சாலையில் அமைந்துள்ள சாலையோரக்கடைகளை அகற்றி, அவர்களுக்கு வேறு எங்கேயாவது நிரந்தரமான கடைகளை அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பாக எங்களால் அளிக்கப்பட்டுள்ள 18.02.2022 நாளிட்ட மனுவையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–05–ஐச் சேர்ந்த செயற்பொறியாளர் 28.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“சென்னை பாரிமுனை பகுதி என்.எஸ்.ஸி. போஸ் ரோடில் அமைந்துள்ள பாதையோரக்கடைகளுக்கு மாநகராட்சியால் எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. ஒதுக்கீடு செய்யப்படாத சாலையோரக் கடைகளை நிரந்தரமாக அகற்றிட மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதியில் அமைந்துள்ள கடைகளைப்பற்றிய கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. மேலும், அப்பகுதியில் Vending zone ஏற்படுத்திடவும் மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகள் இன்னும் 6 மாத காலத்தில் முடிவடையும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனு, வாக்குமூலம், செயற்பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–05 அவர்களின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பாரிமுனை பகுதியில் என்.எஸ்.ஸி. போஸ் சாலையில் அமைந்துள்ள சாலையோரக் கடைகளை அகற்றி அவர்களுக்கு நிரந்தரமான கடைகளை அளித்திடவும் மற்றும் என்.எஸ்.ஸி. போஸ் சாலையை பாதசாரிகள் சிரமமின்றி பயன்படுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கோரியுள்ளனர்.

மண்டலம் -5, செயற்பொறியாளர் வாக்குமூலத்திலிருந்து பாரிமுனை பகுதி என்.எஸ்.ஸி. போஸ் சாலையில் அமைந்துள்ள சாலையோரக் கடைகளுக்கு மாநகராட்சியால் எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை எனவும் அறிய முடிகிறது.

மேலும் ஒதுக்கீடு செய்யப்படாத சாலையோரக் கடைகளை நிரந்தரமாக அகற்றிட மாநகராட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

அப்பகுதியிலுள்ள சாலையோரக் கடைகளை பற்றிய கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது என்று நேரடி விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி Vending Zone-ஐ ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதையும்

அறியமுடிகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பாரிமுனை பகுதியில் ,இப்பணிகளை இன்னும் 6 மாதகாலத்தில் முடித்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக செயற்பொறியாளர் நேரடி விசாரணையின் போது தெரிவித்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் கவனத்தில் எடுத்துக்கொண்டு பாரிமுனை பகுதி என்.எஸ்.ஸி. போஸ் சாலையில் அமைந்துள்ள சாலையோரக் கடைகளை அகற்றிட தேவையான உரிய நடவடிக்கை எடுத்திடவும், அப்படி அகற்றப்படும் சாலையோரக் கடைகளை, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதவகையில், வேறு இடத்தில் அமைக்கவும் மேற்கண்ட நடவடிக்கைகளை 6 மாதகாலத்திற்குள் முடித்திடவும் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M. விஜயன்,
எண்.3/13, 4வது தெரு,
கருணாநிதி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.

2) திரு. B. விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்குத்தெரு,
துர்காதேவி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.

3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) மண்டல அலுவலர்,
மண்டலம் - 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
61, பேசின்பிரிட்ஜ் சாலை,
சென்னை – 600 021.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்